

RES
T 324
TER

# தேர்தல்கள் பற்றி நீங்கள் அறியவேண்டியவை

**PAFFREL**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
LIBRARY

ஜப்பான்

உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி

அச்சுப்பதிப்பும் நிதியுதவியும் ஜப்பானிய அரசாங்கம் (ஓ.டி.ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (1) வாக்குரிமையும் மனித உரிமைகளும்



வினா : வாக்குரிமை என்றால் என்ன?

விடை : ஆட்சியில் பங்கேற்பதற்குள்ள உரிமை மற்றும் மக்களின் விருப்பத்திற்கு அமைய ஆட்சி செய்யாத போது மேற்படி ஆட்சியாளர்களை மாற்றுவதற்குள்ள அதிகாரம் வாக்குரிமை எனப்படும்.

வினா : ஆட்சியாளர்களை மாற்றினாலும் அதன் பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்பவர்களும் முன்னையவர்களைப் போல நடந்து கொண்டால் தேர்தல்கள் மூலம் பிரயோசனம் உண்டா?

விடை : உங்கள் கூற்றில் உண்மை உண்டு ஆனால், வாக்காளர் தீய ஆட்சியாளர்களை விரும்புவதில்லை என்பதை அவரது நடத்தை மூலமும் வாக்களிப்பு மூலமும் வெளிப்படுத்தும் போது புதிதாக தெரிவு செய்யப்படும் ஆட்சியாளர்கள் மாத்திரமன்றி ஆட்சியிலுள்ள ஆட்சியாளர்களும் மாற்றம் அடையக்கூடும்.

வினா : அதாவது மாற்றம் அடையாமலும் இருக்க முடியுமா ?

விடை : மாற்றமடையாவிட்டால் வாக்குக் கிடைக்க மாட்டாது என்ற செய்தி காரணமாக அவ்வாறு நடக்காது.

வினா : வாக்காளர்களாகிய நாமும், மாற்றமடைந்தால்.....

விடை : மெத்தச் சரி ஆட்சியாளர்களும் மாற்றம் அடைவர்.

வினா : இவ்வளவு அதிகாரம் வாக்கிற்கு கிடைப்பதற்குக் காரணம் வாக்காளராக இருக்கும் காரணத்திலா?

விடை : சிறு குழந்தைகள் உட்பட அனைவரது நன்மையைக் கருதி நீங்கள் வாக்கு அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். பொதுவாக நாட்டின் நலன் கருதி வாக்குரிமை பயன்படுத்தப்பட வேண்டும். மனிதனாகப் பிறந்த காரணத்தினால் அல்லது சமூகப் பிரஜையாக இருப்பதன் காரணமாகவே வாக்குரிமை கிடைத்துள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா : வாக்குரிமையும் மனித உரிமைகளும் ஒன்றா?

விடை : ஆம். வாக்குரிமை மனித உரிமையாகும்.

வினா : அது மனித உரிமை என எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது?

விடை : மனித உரிமைகள் பிரகடனத்தின் 21வது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


**மனித உரிமைகள் பிரகடனத்தின் 21வது உறுப்புரை**

1. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்கு கொள்வதற்கு உரிமையுண்டு.
2. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டிலுள்ள அரசாங்க சேவையில் சமமான முறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.
3. மக்களின் விருப்பே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். இவ்விருப்பானது காலாகாலம் நடைபெறும் மெய்யான தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இத் தேர்தல் பொதுவானதும், சமமானதுமான வாக்களிப்புரிமை மூலமே இருத்தல் வேண்டுமென்பதுடன், இரகசிய வாக்கு மூலம் அல்லது அதற்குச் சமமான சுதந்திரமான வாக்களிப்பு நடைமுறைகள் மூலம் நடைபெறுதல் வேண்டும்.

வினா : மேற்படி உறுப்புரை எதனை வெளிப்படுத்துகின்றது?

விடை : மேற்படி உரிமை அரச நிர்வாகத்துடன் தொடர்புபடுத்தப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது.

வினா : அரச நிர்வாகத்துடன் எவ்வாறு தொடர்பு கொள்ள முடிகின்றது?



விடை : இதற்குத் தானே வாக்குக் கேட்க முடியும். அல்லது வேறு ஒரு நபருக்கு வாக்களித்து ஒரு பிரதிநிதி ஊடாக தொடர்பு கொள்ள முடியும்.

வினா : அவ்வாறாயின் மேற்படி பிரதிநிதி என்ன செய்ய வேண்டும்?

விடை : வாக்காளரின் அபிலாசைகளை பிரதிநிதி நிறைவேற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா : அது எப்படி?

விடை : மேற்படி கடமையை நிறைவேற்றுவதற்கு நிர்வாக சபையை அல்லது அரசாங்கத்தை அமைத்தல்.

வினா : வாக்காளர்கள் என்பவர்கள் ஒரு கட்சிக்கு அல்லது பதவியிலிருக்கும் அரசாங்கக் கட்சிக்கு மாத்திரம் வாக்களித்தவர்களா?

விடை : இல்லை. அனைத்து கட்சிகளுக்கும் வாக்களித்த அல்லது வாக்களிக்காத பொது மக்கள் வாக்காளர்களாவர். இவர்கள் அனைவரது தேவைகளைப் பூர்த்தி செய்தல் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

வினா : பொது மக்களின் விருப்பு எவ்வாறு செயற்படுகின்றது?

விடை : குறிப்பிட்ட கால வரையறைக்குள் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். எதுவித அழுத்தங்கள் தாக்கங்கள் இன்றி தேர்தல்கள் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் நடத்தப்பட வேண்டும். சர்வஜன வாக்குரிமை நடைமுறையிலிருக்க வேண்டும். 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவருக்கும் வாக்குரிமை இருத்தல் வேண்டும்.

வினா : நாட்டின் ஒரு பகுதியில் யுத்தம் நடைபெறுமானால்...

விடை : ஆம் மக்களின் விருப்பை உரிய முறையில் அறிய முடியாது.

வினா : தேர்தலும் நாடு பூராவும் இடம்பெறும் யுத்தம் அல்லவா?

விடை : உண்மை. சரியான செயற்பாட்டை செயலிழக்கச் செய்வதற்கே அதனை யுத்தமாக மாற்றியுள்ளனர்.

வினா : சரியான செயற்பாடு என்பது என்ன?

விடை : அந்தரங்கமாக தனது விருப்பத்தை செயற்படுத்துவதற்கு வாக்காளருக்கு பூரண வசதி இருத்தல் வேண்டும். தனது சார்பில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பிரதிநிதி தனது பூரண சம்மதத்துடன் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

வினா : நாம் விருப்பைத் தெரிவித்த பின்னர் எமது பிரதிநிதிகளுடைய விருப்பே செயற்படுத்தப்படுகின்றது, இல்லையா?

விடை : அவ்வாறாயின் எமது விருப்பு அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அவர்கள் பல்வேறு வழிகளைக் கையாண்டு எம்மீது ஏற்படுத்தியுள்ள அவர்களுடைய விருப்பே அதுவாகும்.

வினா : எம் மீது எமது விருப்பை உருவாக்கிக் கொள்ள முடியுமா?

விடை : கடினமானது தான். ஆனால், தூண்டல், மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் என்பவற்றிற்கு அடிபணியாது தனது விருப்பத்தை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006

வினா : இதற்கு தேர்தல் வேட்பாளர்களின் உரிமைகளைக் கேட்க வேண்டும். பத்திரிகைகளை வாசித்தல் வேண்டும். உருவங்களைப் பார்க்க வேண்டும் அல்லவா.

விடை : இவை அனைத்தும் வேட்பாளர்களின் விருப்பங்களைப் பிரதிபலிக்கும்.

வினா : அவ்வாறாயின் எமது விருப்பம் எங்கே?

விடை : மனிதன் என்ற வகையில் நாம் சரி, பிழை என்பவற்றை சரியான இனம் காண வேண்டும்.

வினா : விருப்பு என்பதும் இலகுவான விடயம் அல்ல.

விடை : ஆம். அறிவு விளக்கம் உடையவர்களின் கருத்துக்களை அறிய வேண்டும். ஆனால் தமது விருப்பதை தாமே தயாரித்தல் வேண்டும்.


## (2) வாக்குரிமையும் அரசியல் யாப்புச் சட்டமும்

வினா : சட்டரீதியாகவே நாம் வாக்குரிமையைப் பெற்றுள்ளோமா?

விடை : ஆம் அனைத்துப் பிரஜைகளுக்கும் இறைமை உண்டு. அந்த உரிமைகளுள் ஒன்று வாக்குரிமையாகும். இது பற்றி அரசியல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> மக்களின் இறைமை அரசியல் யாப்பின் 3வது உறுப்புரை இலங்கைக் குடியரசின் இறைமை மக்களுக்குரியதாகவும் பாராதீனப்படுத்த முடியாததாகவும் இருக்கும்.
>
> (1). ஆட்சித் தத்துவங்கள் (சட்டமாக்கற் தத்துவம், நிறைவேற்றுத் தத்துவம், நீதித்துறைத் தத்துவம்)
>
> (2) அடிப்படை உரிமைகள்
>
> (3) வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கும்

வினா : சட்டப் புத்தகத்தின் படி மக்களைப் போல அதிகாரம் படைத்த வேறு ஒரவரும் இல்லை ஆனால் உண்மையில் என்ன நடந்துள்ளது?



விடை : நீங்கள் கூறும் விடயத்தில் சரி - பிழை இரண்டும் உண்டு. மக்கள் உண்மையில் பலவீனமானவர்கள் என்று கூறுவது சரி. ஆனால் தம்மைப் பலப்படுத்திக் கொள்ள எடுக்கும் முயற்சி போதாது. இத தவறாகும்.

வினா : முயற்சி எடுப்பது எவ்வாறு?

விடை : வாக்குரிமை சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குரிமை செயற்படுத்துதல்
அரசியல் யாப்பின் உறுப்புரை 4 அ

மக்களது சட்டமாக்கற்தத்துவம், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தினாலும், மக்கள் தீர்ப்பொன்றின்போது மக்களாலும் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(1). ஆட்சித் தத்துவங்கள் (சட்டமாக்கற் தத்துவம், நிறைவேற்றுத் தத்துவம், நீதித்துறைத் தத்துவம்)

(2) அடிப்படை உரிமைகள்

(3) வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கும்(2) அடிப்படை உரிமைகள்

வினா : தற்போதும் இது நடைபெறுகின்றது அல்லவா?

விடை : ஆனால், மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறாதபடியால் ஏதோ ஒரு தவறு இருக்கின்றது.

வினா : இது ஆட்சியாளருடைய தவறு இல்லையா?

விடை : நாம் அவர்களை நியமிக்கின்றபடியால் எம்மிடமும் தவறு இருக்கின்றது.



வினா : தவறைத் திருத்துவதற்கு எமது வாக்குரிமை போதுமானதா?

விடை : உண்மையில் கல்வி, கலாசாரம், சட்டம் என்பவையும் தாக்கத்தை ஏற்படுத்தினாலும் வாக்குரிமை மூலம் தவறைத் திருத்துவதற்கு ஆரம்ப நடவடிக்கை எடுக்கலாம்.

வினா : அது எப்படி?

விடை : வாக்காளர்கள் என்ற வகையில் கிராம மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் முழு நாட்டிலும் ஓர் சக்தியைக் கட்டியெழுப்புவதன் மூலம் அதனை அமுலாக்க முடியும்.

வினா : இதற்கான உரிமை எமக்கு உண்டா?

விடை : ஆம். தமது அதிகாரத்தைச் செயற்படுத்தவும், விருப்பத்தைத் தயார் செய்யவும், அபிலாசைகளை வெளிப்படுத்தவும், ஸ்தாபன ரீதியாக அணிதிரள்வது முக்கியம். இங்கு வாக்குரிமை இன்றியமையாதது.

UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் யாப்பின் உறுப்புரை 4 உ

பதினெட்டு வயதை அடைந்துவரும், குடியரசு ஜனாதிபதிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமான தேர்தலிலும் ஒவ்வொரு மக்கள் தீர்ப்பிலும் இதனகத்துப் பின்னர் எற்பாடு செய்யப்பட்ட விதமாக தேருநராகஇருப்பதற்கும் தகைமை கொண்டுள்ளமையால் தேர்தல் இடாப்பில் தம்பெயர் பதிவு செய்யப்பட்டவரும்

வினா : ஒருவர் வாக்களிக்கும் உரிமையை எவ்வாறு பெறுகின்றார்?

விடை : இதற்கு இரண்டு முக்கிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதாவது,

(1) தேர்தல் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(2) இலங்கையின் பிரஜையாக இருத்தல் வேண்டும். 18 வயதைப் பூர்த்தி செய்திருக்காவிட்டால் தேர்தல் இடாப்பில் பெயரைக் குறிப்பிட முடியாது.

தேர்தல் ஒருவராக இருப்பதற்கான
அரசியல் யாப்பின் உறுப்புரை 88

இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதமாகத் தகமையற்றவரானாலொழிய, தோதல் இடாப்பில் பெயர் குறிப்பிடப்படாது இருப்பின் அந்நபர் வாக்களிக்க முடியாது. அரசியல் யாப்பின் 89வது உறுப்புரைக்கு அமைய வாக்களிக்க உரிமையை இழந்தவராகக் கருதப்படுவராயின்

(அ) அவர் இலங்கைப் பிரஜையல்லவெனில்
(ஆ) 18 வயதைப் பூர்த்தி செய்து தேருநராகப் பதிவ செய்யாவிட்டால்,
(இ) சித்த சுவாதீனமற்றவர் என நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்திருந்தால்,

வினா : சிறிய விடயத்திற்கு இவ்வளவு சட்டங்கள் ஏன்?

விடை : விடயம் சிறியதல்ல. உங்கள் விருப்பத்தை தெரிவிப்பது நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பதாகும். இதற்கென வேறுபல சட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றன. தேர்தல் ஆணையாளரின் கீழ் ஓர் செயலகம் செயற்படுகின்றது. பல உத்தியோகத்தர்கள் இயங்கி வருகின்றனர். கிராம உத்தியோகத்தர், பிரதேசச் செயலாளர், ஆகியோருக்கும் பல பொறுப்புக்கள் சுமத்தப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக செயற்பாட்டு ரீதியான பணிகள் செய்யப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா : எமது மனதில் ஏற்படும் விருப்பத்தை செயற்படுத்துவதற்கு எத்தனை ஆயிரம் பேர் கஷ்டப்படுகின்றனர்?

விடை : அது மாத்திரமல்ல, பல கோடி ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. இவற்றிற்கான செலவினங்களை வாக்களர்களே ஏற்றுக்கொள்கின்றனர்.

வினா : அதாவது இது பற்றி ஆர்வத்துடனனும் கவனத்துடனும் செயற்படவேண்டும்.

விடை : ஆம். ஆரம்பத்திலிருந்து இறுதி வரை தொடர்ச்சியாகத் கவனஞ் செலுத்தப்பட வேண்டும். அதாவது தேர்தல் இடாப்பில் பெயர் பதியப்படுவதில் இருந்து வாக்களிப்பு முடியும் வரை, தொடர்ந்து எமது உரிமைகளைப் பாதுகாப்பதற்குச் செயற்படவேண்டும்.

விடை : எமது உரிமைகளைப் பறிக்கப்பட்ட நிலையில் உள்ளவர்கள் இருக்கின்றனரா?


விடை : ஆம். எனவேதான் வாக்காளர்களும், தேர்தல் ஆணையாளரும், அரச உத்தியோகத்தர்களும் கட்சி சார்பற்ற முறையில் நடந்துகொள்ள வேண்டும்.

## (3) தேர்தல் குற்றங்களும் வாக்காளர்களும்.

வினா : வாக்காளர்களின் வாக்குகளைப் பறிமுதல் செய்யும் பல்வேறு சக்திகள் செயற்படுகையில் அப்பாவி மக்கள் என்ன செய்வது?

விடை : வாக்களிப்பது மூலமே அவர்களுக்குப் பாடம் புகட்டமுடியும்.

வினா : சிலர் எமக்குச் சேவை செய்வதாகக் கூறி கொலை செய்து கொள்கின்றனர்.



விடை : ஆம். ஒரு சிலர் நாட்டிற்குச் சேவை செய்வதற்காக அதேபோல நாட்டிற்குச் சேவை செய்ய முன்வருவோரை தாக்குகின்றனர்.

வினா : பிறரின் சுவரொட்டிகளை கிழித்தெறிவது, கொடிகளை வெட்டுவது எமது நன்மைக்காகவா?

விடை : அதுதான்! இப்படிச் சிந்திக்கும் போது இவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

வினா : நாட்டின் சட்டத்தைப் பாதுகாப்பதாகக் கூறி தேர்தல் சட்டங்களை மீறுகின்றனர்.



UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்தல் குற்றங்களின் சுருக்கம்**

கள்ள வாக்குப் போடுதல், உணவு வகைகளை அல்லது பணத்தைக் கொடுத்தல், அல்லது அவற்றைத் தருவதாக உறுதியறித்தல், ஊழல் நடவடிக்கைகள், வாக்குப் பத்திரங்களை விற்றல், விலைக்கு வாங்குதல், தம்வசம் வைத்திருத்தல், வாக்குப் பெட்டிகளை களவாகத் திறத்தல், அழித்தல், கள்ள வாக்குப் பத்திரங்களை அச்சிடல், தகுதியற்றவர்கள் வாக்களித்தல் என்பன தேர்தல் குற்றங்களாகும்.
வாக்களிப்பதற்கு அல்லது வாக்களிக்காமல் இருப்பதற்கு தூண்டுதல், பயமுறுத்தல், தடுத்தல் அல்லது உளவியர் ரீதியாக நட்டத்தை விளைவித்தல் அறிவித்தல்களையும் ஓவியங்களையம் பிரசுரித்தல். தொழிலை இல்லாதொழிப்பதாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாவோ தூண்டுதல். அனுபவிக்கும் சலுகைகளை இல்லாதெரிப்பது என்பன சட்டவிரோதமான நிபந்தனைகளாகும்.
வாக்காளர்களைச் சட்ட விரோதமான முறையில் போக்குவரத்துச் செய்தல். வேட்பாளர்கள் தொடர்பாக பொய்யான பிரகடனங்களை வெளியிடுதல், பிரசார அறிவிப்புகளில் அச்சிடுபவரின், வெளியீட்டாளரின் பெயர் குறிப்பிடப்படாமை சட்டவிரோதமான செயல்களாகும்.

# பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் (1981/1) 66 முதல் 90 வரை

வினா : இவ்வளவு அழகான அலங்காரங்களம் சுவரொட்டிகளும், ஓவியங்களும் எதற்கு?

விடை : அவர்கள் இதைத்தான் கூறுகின்றனர். ஷஷவாக்களாகர்களே, புரிந்துகொள்ள உங்களுக்குப் புத்தி குறைவு. எனவே எமது உபசரிப்புகளில் நிங்களுக்கு ஏமாறுங்கள்'' என்றே வேட்பாளர்கள் கூறுகின்றனர்.

வினா : இவ்வளவு உறுதிமொழிகள் கூறுவதும் உபசரிப்புக்கள் கவனிப்புகளும் இதன் காரணமாகவா?

விடை : ஆம். வாக்காளர்களை இலகுவாக ஏமாற்ற முடியும் என அவர்கள் எண்ணுகின்றனர்.

வினா : அவர்கள் செய்வதுபொய் என்பதை அறிவார்கள். ஆனால் வாக்கும் அளிப்பார்கள் அப்படி யானால்?

விடை : நல்ல விடயம். அவர்கள் செலவு செய்யும் முறையைப் பார்த்துத் தீமானியுங்கள் உங்களை ஏமாற்றுவதற்கு செலவு செய்யும் நிதியை அதிகாரம் கிடைத்ததும் கட்டாயமாக உழைத்துக் கொள்வதற்கே இந்தப் போட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா : அப்படியானால், அவர்கள் ஏதாவது உழைத்து எமக்கும் வேலை செய்வதாயின் கூடாதா?

விடை : பலரும் இப்படி யோசிப்பார்கள். உண்மையில் இதுவரை அவர்கள் பொது மக்களின் பணத்தை சேகரித்து இருப்பார்கள். எமது செலவில் ஏதாவது தொழில் முயற்சியில் ஈடுபடுவார்கள் இன்று தேர்தலையும் ஒரு வியாபாரமாக அவர்கள் மாற்றியமைத்துள்ளனர். அதனாலேயே அடிதடி சண்டை தமது வியாபாரத்திற்கு நட்டம் ஏற்படுவதை அவர்கள் விரும்ப மாட்டார்கள். மக்களுக்குச் சேவை செய்வதற்கே பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற வேண்டும். ஆனால், 1947 முதல் இதுவரை எத்தனை பாராளுமன்ற உறுப்பினர்களை நாம் தேர்ந்தெடுத்திருப்போம். அவர்களில் ஒரு சிலரை விட மற்றைய அனைவரும் சிறந்த வாழ்க்கை மார்க்கத்தைப் பெற்றுள்ளனர். வாக்காளர்கள் மென்மேலும் வறியவர்களாக்கப்படடுள்ளனர்.

வினா : இது இத்தேர்தல் முறையிலுள்ள குறைபாடு அல்லவா?

விடை : ஆம். வாக்காளர் மாறினால் மாத்திரமே அது மாற்றமடையும்.

வினா : அவ்வாறாயின் இம் முழு செயற்பாட்டைப் பற்றியும் வாக்காளர்களை அறிவூட்டும் பொறுப்பு ஒருவருக்கும் இல்லையா?

விடை : இப் பொறுப்பும் அரசாங்கத்திற்கே உண்டு எனவே, ஆட்சி அதிகாரம் உடையோர் செய்யும் அவறான நடவடிக்கைகளைப் பற்றி அறிவூட்டும் பொறுப்பு தேர்தல் ஆணையாளருக்கே உண்டு. ஆனால், அது வரையறுக்கப்பட்டது. தேர்தல் ஆணையாளரின் அறிவித்தல்கள் மூலம் பாரபட்சமற்ற செயல்முறை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் அதுவே நடைபெறுகின்றது. இதைத் தவிர எமது நாட்டு ஊடகங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இப் பொறுப்பு இருக்கின்றது. இது ஒரு ஒழுக்கவியல் கடமையாகவும் மக்கள் மீது கொண்ட கட்டுப்பாடு காரணமாகவும் செயற்பட வேண்டும்.

வினா : தற்போது அவர்கள் அவ்வாறு செய்கின்றனரா?

விடை : ஒரு சில ஊடகங்கள், நிறுவனங்கள் மற்றும் தேர்தல் அவதானிப்பு செயற்பாடுகள் மூலம் இது பற்றிய அறிவூட்டல் இடம் பெறுகின்றது.

வினா : ஓரிரு கட்டுரைகளை எழுதிப் பிரசுரித்து, தேர்தல்களை அவதானிப்பது மூலம் மாத்திரம் நீங்கள் கூறும் அளவிற்கு மாற்றம் ஏற்படுமா?

விடை : இவை மூலம் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இவற்றின் உதவி மூலம் இம் மாற்றத்தை பொது மக்களே செய்ய வேண்டும். அவதானிப்புகள் மற்றும் அது தொடர்பான தகவல்களை அம்பலப்படுத்துவதன் மூலமே தவறான செயற்பாடுகளை ஓரளவிற்குக் கட்டுப்படுத்த முடியும். முழுமையாகக் கட்டுப்படுத்துவதாயின் வாக்காளர்களாலேயே அதனைச் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா : வாக்களிப்பது மாத்திரமே வாக்காளரின் கடமை அல்லவா?

விடை : இல்லை. ஒவ்வொரு வாக்காளரும் அவதானிப்பாளராகச் செயற்பட வேண்டும். அவசியமான சூழலும் சிறந்த செயற்பாடும் உண்டா என ஆராய வேண்டும். வேறு அவதானிப்பாளர்களும் பங்குபற்றுவதன் மூலம் இதனைச் செய்ய முடியும். நாடு முழுவதும் இத்தகைய நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டிய காலம் வந்து விட்டது.

வினா : அவ்வாறாயின் வாக்காளர்களின் அவதானிப்புகளை எவ்வாறு ஆரம்பிப்பது?

விடை : தேர்தல் இடாப்பில் தனது பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளதா என நேர காலத்துடன் ஆராய்ந்து பார்க்க வேண்டும். தனது பெயர் மேற்படி இடாப்பில் இல்லாவிட்டால் தனது பிரதேச தேர்தல் தெரிவத்தாட்சி உத்தியோகத்தரிடம் முறையீடு செய்ய வேண்டும். உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கிடைக்காவிட்டாலும் மேற்கண்டவாறு முறையீடு செய்ய வேண்டும்.

வினா : இந்த வாக்காளர் அறிவித்தல் அட்டைகளை யாராவது பறித்துச் சென்றால், அல்லது அச்சுறுத்தி எடுத்துச் சென்றால்


விடை : இப்படியான நிர்ப்பந்தம் ஏற்பாட்டால் உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கும் பிரதேச தேர்தல் தெரிவத்தாட்சி உத்தியோகத்தருக்கும் அறிவிக்க வேண்டும். தேர்தல் அவதானிப்பு அமைப்புகளுக்கும் முறையீடு செய்தல் வேண்டும்.

வினா : வாக்காளர் வாக்குச் சாவடிக்குச் செல்லும் போது அவரது வாக்கு ஏற்கனவே போடப்பட்டிருந்தால் என்ன செய்வது?

விடை : இது தொடர்பாக வாக்குச் சாவடி பொறுப்பாளருக்கு முறையீடு செய்யுங்கள். செல்லுபடியற்றதாயினும் அவர் வழங்கும் வாக்குப் பத்திரத்தைப் பயன்படுத்துங்கள். இவற்றின் எண்ணிக்கை பின்னர் பயன்படும். இது பற்றி அவதானமாக இருத்தல் வேண்டும்.

வினா : இவை அனைத்தும் சரி. ஆனால், பாரதூரமான அச்சுறுத்தல், இம்சித்தல், நிர்வாணமாக்கல் போன்ற வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றால்?

விடை : இச் சந்தர்ப்பங்களில் நீங்கள் பயமின்றி உரிய பொலிஸ் நிலையங்களுக்கும் தேர்தல் அவதானிப்பு நிலையங்களக்கும் முறையீடு செய்யுங்கள். பின்னரும் அது பற்றி ஆராய்ந்து பாருங்கள். அவசியமான ஆலோசனைகளை மேற்படி நிறுவனங்களிடம் பெறுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா : இப்படிக் கூறினாலும் சில பொலிஸ் நிலையங்கள் அப்பிரதேசங்களைச் சார்ந்த சண்டியர்களுக்கு எதிராக முறையீடுகளை ஏற்றுக் கொள்வதில்லை.

விடை : முறையீடுகளை எழுத்து மூலமாக மேற்படி பொலிஸ் நிலையத்திற்கும் பொலிஸ், கண்காணிப்பாளருக்கும் அனுப்புங்கள். அவசியமான சட்ட ஆலோசனைகளையும் பெறுங்கள். மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் தேர்தல் அவதானிப்பு நிலையங்களுக்கும் முறையீடு செய்யுங்கள்.

## 4. தேர்தல் குற்றங்களும், அவற்றிற்குரிய சட்டப் பரிகாரங்களும்

வினா : பத்திரிகைகள் மூலமும், அவதானிப்புக்கள் மூலமும் கண்டு பிடிக்கப்படும் குற்றங்களுக்கும் அவசியமான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? இவை பற்றி ஆராய்தல் அல்லது குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதில் பயன் உண்டா?

விடை : ஆம். ஒரு தேர்தலில் தேர்தல் குற்றங்கள் ஆயிரக்கணக்கில் கண்டுபிடிக்கப்பட்டாலும் சட்டத்தின் பிடியில் அகப்படுபவை ஒரு சிலவே. இச் செயற்பாடு சுதந்திரமானதாக அமைய வேண்டும். சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழுவிற்கு இது பற்றிய அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அதுவும் பொது மக்களால் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

வினா : சட்டம் சரியாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் வாக்காளர் அதை நியாயப்படுத்தப்படுவார் அல்லவா?

விடை : அது உண்மை. ஆனால் புதிய சட்டங்களை உருவாக்குவதற்கும் வாக்காளரே முன்னணிப் பாத்திரம் எடுத்தல் வேண்டும்.

வினா : நாய்ச் சண்டையை ஒத்த போட்டியில் இது சாத்தியப்படுமா?

விடை : உண்மையில் இந் நாய்ச் சண்டையை ஒரு விளையாட்டுப் போட்டியின் நிலைக்கு மாற்றுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். அப்போது நாம் எண்ணும் மாற்றத்தைச் செய்ய முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் வரலாறு சுருக்கமாக

1911 சட்டவாக்கச் சபை

1920 சட்டவாக்கச் சபை

1923 சட்டவாக்கச் சபை

1931 அரச சட்டசபை

1936 அரச சட்டசபை

1947 பாராளுமன்றம்

1952 பாராளுமன்றம்

1956 பாராளுமன்றம்

1960 மார்ச் பாராளுமன்றம்

1960 ஜூலை பாராளுமன்றம்

1970 பாராளுமன்றம்

1977 பாராளுமன்றம்

1978 அரசியல் யாப்பு மற்றும் நிறைவேற்று ஜனாதிபதி

1982 பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு

1988 பாராளுமன்றம்

1994 பாராளுமன்றம்

2000 பாராளுமன்றம்

UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006
LIBRARY



599953

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY ... LIBRARY
27 SEP 2006

வெளியீடு
சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு
93/10, துடுகெமுனு வீதி, கொழும்பு 6.
தொலை : 2824425, 2818675, 5557011/13
பக்ஸ் : 5557012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org